This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# விரும்பிச் சொன்ன பொய்கள்!

www.writersujatha.com

## 1

மந்தாகினி புருஷோத்தம் என்கிற பெண்மணிக்காக மதுரை விமான நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தபோது என் 'இதுவரை வாழ்க்கை'யை விமானம் வருவதற்குள் சொல்லிவிடுகிறேன்.

என் பெயர் கே.என்.ராதாகிருஷ்ணன். அமலா சர்க்கஸில் இருந்த போதிலிருந்தே என்னை ராதா என்றுதான் கூப்பிடுவார்கள். யாரும் என்னை கே.என். ராதாகிருஷ்ணன் என்று வாய்நிறையக் கூப்பிட்டதில்லை. கோர்ட்டில் தவிர.

அமலா சர்க்கஸில் என்னை வேலையை விட்டு நீக்கிவிட்டதற்குக் காரணம் கிரிஜா என்கிற மலையாளப் பெண்ணின் மார்பில் அம்பு எய்து விட்டேன். வேண்டுமென்றே.

ஏன் என்று சொல்வதற்கு முன் என் சுபாவத்தைப் பற்றிச் சொன்னால்தான் உங்களுக்கு நான் ஒரு மலையாளப் பெண்ணின் மார்பில் நடுமையத்தில் அம்பு எய்ததின் பின்னணி புரியும்.

என் சுபாவம் 'முணுக்' என்ற மூன்று எழுத்துக்களில் அடங்கிவிடும். முணுக்கென்றால் கோபம் வந்துவிடும்: அடித்துவிடுவேன். முணுக்கென்றால் அழுகை வந்துவிடும்; மாலைமாலையாகக் கண்ணில் நீர் வடிப்பேன். திருப்புமுனை சமாசாரங்களையெல்லாம் ஒரு நிமிஷத்தில் தீர்மானித்துவிடுவேன். நிமிஷமாய்க் காதலித்து விடுவேன்; நிமிஷமாய் கைவிட்டுவிடுவேன்.

இதை முன்கோபம் என்பது தப்பு. என் நண்பன் வில்ஃப்ரட் கோபால்சாமி ரொம்பப் படித்தவன். அவன் சொல்வான். "ராதா, நீ ரொம்ப இம்பல்ஸிவ்டா." "இம்பல்ஸிவ்' எல்லாம் அர்த்தம் புரிந்து கொள்ளும் அத்தனை படிப்பு எனக்கில்லை. சின்ன வயசிலிருந்து சர்க்கஸ் சூழ்நிலையில் வாழ்ந்தவன். அப்பா ஜெமினி சர்க்கஸில் ட்ரபீஸ் ஆர்ட்டிஸ்ட்டாக இருந்தார். கமலா, ரேமான் என்று மாறிக் கொண்டே இருப்பார். அம்மா அவர் போகும் இடமெல்லாம் போவாள். எப்போதும் சிரித்துக் கொண்டே பெட்டி படுக்கையோடு தயாராக இருப்பாள். அம்மா புலி, சிங்கம் இவைகளையெல்லாம் தழுவிக் கொடுத்து தலையை வாய்க்குள் நுழைத்து எடுத்துச் சிரித்து விட்டு கையை உயர்த்திவிட்டு வந்து என்னைத் தாலாட்டுவாள். எனக்கு ஏற்பட்ட 'இம்பல்ஸ்' குணம் அம்மாவாலா, அப்பாவாலா என்று தீர்மானிப்பதற்குள் இருவரும் செத்துப் போய்விட்டார்கள். அப்பா வலையிலிருந்து விலகி விழுந்து ஒரே ஒரு நிமிஷத்தில்... வேண்டாம் அழுகை வருகிறது.

அம்மா ரொம்ப நாள் தூக்கம் போலிருந்துதான் போனாள். 'கோமா' என்ற சொன்னார்கள். தோளில் புலி அறைந்து விட்டது. ரத்தக் குதறல், புலிக்கு அன்றைக்கு 'மூடு' சரியில்லையோ, என்ன எழுவோ, அம்மாவை ஒரே சவட்டு சவட்டிவிட்டது.